## சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் - 2015

---

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 ஆம் ஆண்டில் 19 ஆம் இலக்க சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்ற அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் 2015 டிசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

மீளாய்வாண்டு இறுதித் தினத்தில் உள்ளவாறான ரூபா 25,675,995 நடைபெறும் வேலையானது நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நியமத்தின் 47 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்கள் என்பன 03 ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மீள மதிப்பீடு செய்யப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு நிலையான சொத்துக் கணக்கில் காணப்படும் ரூபா 625,453,272 கிரயமுடைய சொத்துக்கள் சம்பந்தமாக அந்த ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ii) நியமத்தின் 72 ஆம் பிரிவின் பிரகாரம் காணிகளும் கட்டிடங்களும் வெவ்வேறாக இனங்காணப்படாது 2005 ஆம் ஆண்டில் மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்ட ரூபா 272,000,000 பெறுமதியான காணிகளதும் கட்டிடங்களதும் 50 சதவீதம் கட்டிடங்களது பெறுமதியாகக் கருதப்பட்டு அதற்கமைய தேய்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

இணையதளச் சேவைக் கம்பனி ஒன்றினால் மன்றத்திற்குரிய பிரஜாசக்தி நிலையங்களில் 2009 டிசெம்பர் 16 முதல் 2013 நவெம்பர் 11 வரை மேற்கொண்ட V-SAT என்டெனா பராமரிப்புச் சேவைகளின்போது 120 சந்தர்ப்பங்களில் 96 சந்தர்ப்பங்களுக்கெனக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 7,008,000 கணக்கிலிடப்படவில்லை.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமென வரிசை அமைச்சினால் மன்றத்திற்கு ரூபா 4,356,341 மீளளிப்புச் செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், அவ்வாறு மீளளிப்புச் செய்யப்பட வேண்டுமென குறித்த வரிசை அமைச்சினது கணக்கீட்டு அறிக்கைகளில் தெரியப்படுத்தப்படவில்லை.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

மன்றம் பெற வேண்டிய ரூபா 9,124,815 மற்றும் மன்றம் வழங்க வேண்டிய ரூபா 117,122,744 கூட்டுத் தொகை என்பவற்றிற்கான கணக்கீட்டு மீதிகள் சம்பந்தமான காலப் பகுப்பாய்வு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசத்துக்கு மகுடம் விழாவின்போது நிர்மாணிக்கப்பட்ட விற்பனைக் கூடத்திற்கெனத் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட வேண்டிய ரூபா 282,567 மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

(ஆ) நெடுங்காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறிருக்கும் முற்பணம் மற்றும் கடன்பட்டோர் மீதியாகிய ரூபா 13,084,208 மற்றும் கடன் கொடுத்தோர் மீதியாகிய ரூபா 6,074,979 என்பவற்றை அறவிடுவதற்கோ அல்லது தீர்த்து வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 2012 நவெம்பர் 07 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான குழுக் கூட்டத்திலும் மீள அறவிடப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்டிடத்திற்கு மன்றத்தால் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு வேலைகளுக்காக மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு அறிவிடப்பட வேண்டியுள்ள ரூபா 1,271,709 தொகையானது 2016 ஆம் ஆண்டின் இறுதியளவிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரஜாசக்தி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்கு தரவுக் கோவை ஒன்றை பேணுவதற்கான கணனி முறைமையை உருவாக்குவதன் பொருட்டு தனியார் கம்பனி ஒன்றிற்கு 2014 ஏப்ரல் 23 ஆந் திகதியன்று ரூபா 541,840 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தபோதும், அப் பணி நடைபெறாமையால் வழங்கிய முற்பணத்தை மீள அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) குறித்த வரிசை அமைச்சின் மூலம் மீளளிப்புச் செய்யப்படும் அடிப்படையில் பெற வேண்டிய வருமானமாகக் கணக்கில் காட்டப்பட்ட 2013 முதலாகவும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலிருந்தும் முன்கொண்டு வரப்பட்டவாறிருக்கும் ரூபா 6,813,624 மற்றும் 2014 ஆம் ஆண்டில் பெற வேண்டிய ரூபா 47,370,427 என்பன 2016 ஆம் ஆண்டு இறுதி வரை மீளளிப்புச் செய்யப்படாதிருந்தன.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்வற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2005 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்ற அதிகாரச் சட்டம் | |
| (i) 3(1) ஆம் பிரிவு | 2015 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் மன்றத்திற்கான பணிப்பாளர் சபை நியமிக்கப்படாதிருந்தது. |
| (ii) 10 ஆம் பிரிவின் 2.3 மற்றும் 4 ஆம் பந்திகள் | தொடர்புடைய அதிகாரங்களையும் கடமைகளையும் அமுலாக்கும்போதும், நிறைவேற்றும்போதும் ஏற்படும் சகல செலவினமும் மன்றம் சேகரித்துள்ள நிதியத்தின் மூலமே மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின்போது மன்றம் ரூபா 3.4 மில்லியன் வருமானத்தை மாத்திரமே சம்பாதித்திருந்தது. அதற்கமைய, மன்றத்தின் சகல செலவினத்திற்குமான பணம் குறித்த வரிசை அமைச்சிலிருந்தே பெறப்பட்டு அதன் மூலம் மன்றப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருந்தன. |
| (ஆ) 1998 டிசெம்பர் 31 ஆந் திகதிய ஊழியர் சேமலாப நிதிய திருத்த அதிகாரச் சட்டத்தின் II ஆம் பகுதியினது 10 (1) மற்றும் (2) ஆம் பந்திகள் | 2012 செப்டெம்பர் தொடக்கம் 2013 மார்ச் வரை ரூபா 4,205,282 கூட்டுத் தொகையான ஊழியர்களதும், சேவை வழங்குபவர்களதும் சேமலாப நிதியப் பங்களிப்புத் தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படாதிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணம் 757 | மன்றத்தின் சகல பிரிவுகளையும் உள்ளடக்குமாறு மீளாய்வாணடிற்கான பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படவில்லை. |
| (ஈ) 2006 பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பந்தி | கணனிகளது கொள்வனவு மற்றும் V-SAT என்டெனா பராமரிப்புச் சேவையைப் பெறுதல் என்பவற்றிற்கு 2009 செப்டெம்பர் முதல் 2014 மார்ச் வரை உடன்படிக்கையின்றி தனியார் சேவை நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 51,099,464 வழங்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (உ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | குறித்த வேலை முடிவுற்றவுடனேயே பெற்ற முற்பணத்தைத் தீர்த்து வைக்க வேண்டுமாயினும், பிரஜாசக்தி செயற்திட்ட முகாமையாளருக்கு 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வழங்கிய முறையே ரூபா 318,867 கூட்டுத் தொகை மற்றும் ரூபா 118,071 கூட்டுத் தொகை முற்பணமானது 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் மன்றத்தின் செயற்பாட்டினால் விளைந்த பெறுபேறு ரூபா 45,027,660 பற்றாக்குறை ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 48,715,500 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 3,687,840 முன்னேற்றம் தென்பட்டது. அரசாங்க மானியம் ரூபா 71,200,209 குறைவடைந்தபோதும், நன்கொடை, பிரசார மற்றும் மேம்பாட்டுச் செலவினத்தில் ரூபா 58,053,559, நுகர் பொருள் கொள்வனவு, பயணச் செலவினம் மற்றும் எரிபொருள் செலவினம் போன்ற பல்வேறு செலவினங்களில் ரூபா 9,972,149, கூட்டங்கள், பயிற்சியளித்தல், ஏனைய செலவினம் என்பவற்றில் ரூபா 16,621,645 எனக் குறைவு ஏற்பட்டமை இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணிகளாகும்.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 5 ஆண்டுகளது நிதி பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில், 2010 ஆண்டில் ரூபா 11,511,530 ஆகவிருந்த பற்றாக்குறை 2015 ஆம் ஆண்டளவில் ரூபா 45,027,660 ஆகியிருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்யும்போது 2011 முதல் 2015 வரையிலான 5 ஆண்டுகளுக்கான மன்றத்தின் பணப் பங்களிப்பு முறையே ரூபா 37,117,620, ரூபா 37,819,654, ரூபா 57,143,901, ரூபா 69,018,051, ரூபா 85,973,434 ஆகியிருந்தது. சம்பள அதிகரிப்பே 2013,2014,2015 ஆம் ஆண்டுகளது பங்களிப்பு அதிகரிப்புக்கான விசேட காரணியாகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினத்திற்கு மீளாய்வாண்டின்போது முறையே ரூபா 47 மில்லியன் மற்றும் ரூபா 153 மில்லியன் என நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது மூலதனச் செலவு எதுவுமே மேற்கொள்ளப்படவில்லை. பதவியணியினருக்கான சம்பளம், வேதனம், ஏனைய தொடர்புடைய மீண்டுவரும் செலவினம் என்பவற்றிற்கு குறித்த வரிசை அமைச்சிலிருந்து கிடைத்த தொகை ரூபா 74.8 மில்லியனாகும். எஞ்சிய மீண்டுவரும் செலவினத்தை ஈடுசெய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு குறித்த வரிசை அமைச்சிலிருந்து ரூபா 20.96 மில்லியன் பெறப்பட வேண்டியிருந்தது. மேலும், மீளாய்வாண்டினது முதல் 03 மாதங்களுக்குமான சம்பளமும் ஆகஸ்ட் முதல் நவெம்பர் வரையிலான சம்பளமும் பதவியணியினருக்கு 2015 டிசெம்பர் மாத இறுதியிலேயே மன்றத்தால் கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது.

(ஆ) மன்றப் பணிகளது மீளாய்வாண்டிற்கான செயல் முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்படாததுடன் ஆண்டின் முதல் 03 மாதங்களின் பின்னர் திட்டமிடப்பட்ட பணிகள் எதுவுமே மன்றத்தால் நிறைவேற்றப்பட்டிருக்காமையும் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றம் 42 பிரஜாசக்தி நிலையங்களை நடாத்துகின்றது. அவற்றின் உரித்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன், மேலும் 35 பிரஜாசக்தி நிலையங்களை உருவாக்குவதற்கு 2012 ஆம் ஆண்டின்போது காணிகளது அளவை மேற்கொள்ளப்பட்டு அதற்கென ரூபா 2,359,298 செலவழிக்கப்பட்டுமிருந்தது. எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டின் இறுதிவரை அக் காணிகளை மன்றம் சுவீகரித்திருக்கவில்லை.

(ஆ) 2005 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மன்றத்தை உருவாக்குவதற்கான அதிகாரச் சட்டத்தின் 10(2) ஆம் பிரிவின் கீழ் மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்ட ரூபா 272 மில்லியன் பெறுமதியான காணிகளுக்கும் கட்டிடங்களுக்குமான ஆவணங்கள் இல்லாமையால் 2016 டிசெம்பர் இறுதியளவிலும் உரித்துறுதிகள் தயாரிக்கப்படாதிருந்தன.

(இ) பிரஜாசக்தி செயற்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட சில பிரதேசங்களில் கள ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காக அமைச்சினால் மன்றத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 20,484,000 தொகையானது நியமனக் கடிதங்கள் அல்லது குறிப்பிடப்பட்ட பணி ஒப்படைப்பு இல்லாதும் உள்ளவாறு நிறைவேற்றப்பட்ட கடமைகளுக்குரிய உறுதிப்படுத்தல்களும் இல்லாது 90 உத்தியோகத்தர்களுக்கு சம்பளமும் படியுமாக 2010 முதல் 2013 ஏப்ரல் வரையான காலப்பகுதியின்போது வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) மேலே குறிப்பிட்டவாறு கள ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக நிலவிய நலிவான முகாமைத்துவம் காரணமாக மன்றத்தின் செயற்திட்ட முகாமையாளர் மற்றும் செயற்திட்ட ஒருங்கிணைப்பாளரால் 2011 ஏப்ரல் முதல் 2013 ஏப்ரல் வரையான காலப்பகுதியின்போது போலியான பெயர்களைச் சமர்ப்பித்து ஒருங்கிணைப்புப் படியில் ரூபா 4,252,500 ஐ மோசடியாகத் தமது வங்கிக் கணக்குகளிலிட்டிருந்தனர். அதன் பொருட்டான விசாரணையின் பின்னர் அத் தொகையை அவ்வுத்தியோகத்தர்கள் திருப்பிச் செலுத்துவதற்கு இணங்கியபோதும், 2014 மே 25 ஆந் திகதியளவில் ரூபா 1,050,000 கொடுப்பனவு செய்யப்பட்டு எஞ்சிய ரூபா 3,202,500 தொகையானது 2016 இறுதி வரை அறவிடப்படாதிருந்தது.

இந் நிதி மோசடி தொடர்பான வழக்கு விசாரணை முடிவடையாதுள்ளதுடன், நீதிமன்றத் தீர்ப்புக்கமைய ரூபா 3,202,500 அறவிடப்படுவதாகவும் இது தொடர்பாக பிரஜாசக்தி செயற்பாட்டுக் கூறின் பணிப்பாளர் (நிதி) குறிப்பிட்டிருந்தார்.

(உ) மன்றம் கள ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளைப் பொறுப்பேற்ற 2010 முதல் 2011 மார்ச் வரையான காலப்பகுதியின்போது கள ஒருங்கிணைப்புப் படியாகிய ரூபா 5,265,000 பிரத்தியேக வங்கிக் கணக்குகளில் செலவு வைக்கபட்டமை தொடர்பாக மன்றம் விசாரணைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

## 4.3 பொருட் கொள்வனவும் ஒப்பந்தச் செயற்பாடும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் உள்ள ஏற்பாடுகளைக் கடைபிடிக்காது சீமெந்து பிளொக் கல் இயந்திரம், விளையாட்டுத்துறை மற்றும் பூசை செய்வதற்கான பொருட்கள், கணினிகள் மற்றும் நானாவித உபகரணங்கள் என்பன கொள்வனவுத் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்கு கொடுப்பனவை மேற்கொள்ளும் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 72,726,994 க்கு வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வணிகக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இப் பொருட்களுக்கான கொடுப்பனவு 2016 இறுதியளவிலும் மன்றத்தால் மேற்கொள்ளப்படாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவடையாத வேலையின் கீழ் ரூபா 25,675,995 பெறுமதியாகச் சுட்டிக் காட்டப்பட்டிருந்த 09 நிர்மாண வேலைகளது ஒப்பந்தப் பெறுமதியினது கூட்டுத் தொகை ரூபா 72,818,294 ஆகும். அந்த நிர்மாண வேலைகள் 2010,2011,2012 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டு இடை நடுவே கைவிடப்பட்டிருந்தன. 2016 இறுதி வரை அந் நிர்மாண வேலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு மன்றம் தவறியிருந்தது. ஒப்பந்தகாரர் ஒருவருக்கு குறித்த நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கான முற்பணமாக ரூபா 7,544,265 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவருக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 1,985,942 கணக்குகளில் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் முன்கொண்டு வரப்பட்டவாறிருந்தது.

2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளுக்கான மூலதனச் செலவின நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாமையால் வேலையை ஆரம்பிக்க முடியாது போனதாகவும் 2018 ஆம் ஆண்டில் எஞ்சிய வேலையை நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்படுவதாகவும் இது சம்பந்தமாக பிரஜாசக்திப் பணிப்பாளர் (நிதி) குறிப்பிட்டிருந்தார்.

## 4.4 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் முடிவில் உள்ளவாறு பயன்படுத்தப்படாது ஒதுக்கி வைக்கப்பட்டதும் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளானதுமான ரூபா 5,396,901 பெறுமதியான 57 மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்வதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது கணக்காய்வுத் தினமான 2016 நவெம்பர் 30 வரை அவை பயனற்றிருந்தன.

(ஆ) சுய வேலை வாய்ப்புக் கடன் செயற்திட்டத்தின் (Self Employment Loan Project) கீழ் பிரஜாசக்தி நிலையங்களுக்கு வழங்குவதற்கென 2014 டிசெம்பர் 01 ஆந் திகதி ரூபா 4,048,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 44 பிளொக் கல் இயந்திரங்கள் 2015 பெப்ரவரி 24 ஆந் திகதிய நீதிமன்றக் கட்டளைக்கமைய குறித்த பிரஜாசக்தி நிலையங்களுக்கு வழங்கப்படவில்லை. கணக்காய்வுத் தினமான 2016 நவெம்பர் 30 ஆந் திகதியளவிலும் இந்த 44 சீமெந்து பிளொக் கல் இயந்திரங்களும் நோர்வுட்டில் உள்ள தொண்டமான் விளையாட்டரங்கில் பயனற்றவாறு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) நன்கொடையாக வழங்குவதற்குக் கடன் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டில் ரூபா 2,794,368 பெறுமதியான 15 கோவில் மணிகள் மற்றும் 377 பித்தளையினாலான பூசை விளக்குகள், 07உடற்பயிற்சி உபகரணங்கள், 194 விளையாட்டுத் துறை உபகரணங்கள் என்பன தொண்டமான் விளையாட்டரங்கில் பயனற்றவாறு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2007, 2008, 2009 ஆம் ஆண்டுகளில் பிரஜாசக்தி செயற்திட்டத்தின் கீழ் 42 பிரஜாசக்தி நிலையங்களுக்கு இணையதள சேவைகளை வழங்குதல், அதற்கான உசாத்துணைக் கட்டணத்தை வழங்குதல், 42 V-SAT என்டெனா உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், அவற்றைப் பராமரித்தல், பழுதுபார்த்தல் என்பவற்றிற்கென ரூபா 131,404,288 செலவிடப்பட்டிருந்தபோதும், 2014 மார்ச் 01 தொடக்கம் அச் சேவைகளைப் பெறுவது இடை நிறுத்தப்பட்டமையால் கணக்காய்வுத் தினமான 2016 ஆம் ஆண்டு இறுதி வரை அந்த 42 உபகரணங்களும் பயன்படுத்தப்படாதிருந்தன. மேலும், அச் சேவைகளை இடை நிறுத்துவதற்கான பணிப்பாளர் சபையின் தீர்மானம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதிக் கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தின் கீழ் சுட்டிக் காட்டப்பட்ட ரூபா 398,999 கிரயமுடைய ஞாபகார்த்த சின்னங்களது கையிருப்பு நெடுங்காலமாகக் குறித்த நபர்களிடையே வழங்கப்படாது பயனற்றிருந்தன.

**4.5 இனங்காணப்பட்ட இழப்புகள்**

2010 டிசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கைக்கு முரணாகவும் குறித்த வரிசை அமைச்சினதும் நிதி அமைச்சினதும் அங்கீகாரம் பெறப்படாமலும் ரம்பொட கலாசார நிலையத்தில் பயன்படுத்துவதற்கு ரூபா 1,000,000ஆரம்பக் கொடுப்பனவுடனும் 60 மாதாந்தத் தவணைகளில் கொடுப்பனவு செய்யப்படும் அடிப்படையிலும் ரூபா 5,840,000 பெறுமதியான மிட்சுபிசி டபள் கெப் வாகனமொன்று வாடகைக் கொள்வனவு நிதி அடிப்படையில் 2014 நவெம்பர் 26 ஆந் திகதி தனியார் கம்பனி ஒன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. குறித்தபடி தவணைப் பணத்தைச் செலுத்தாமையால் விற்பனையாளரால் குறித்த கெப் வண்டியும் அதன் உரித்தும் மீளாய்வாண்டின் இறுதியில் மீளப் பெறப்பட்டிருந்தது. வாகனத்திற்கான ஆரம்பக் கொடுப்பனவும் தவணைப் பணமாகச் செலுத்திய ரூபா 1,565,504 கூட்டுத் தொகையும் நிறுவனத்தால் மீளப் பெற முடியாத இழப்பாக அவதானிக்கப்பட்டது.

**4.6 பதவியணி நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் தலைமை அலுவலகத்தினதும் 03 அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களினதும் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 218 ஆகும். உள்ளவாறான எண்ணிக்கை 130 ஆகியமையால் 88 வெற்றிடங்கள் நிலவின.

(ஆ) தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்திற்கான பதவியணியும் சம்பள அளவுத் திட்டமும் அங்கீகரிக்கப்பட்டிராதபோதும், 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினரது எண்ணிக்கை 30 ஆகவிருந்தது.

(இ) தலைமை அலுவலகக் கணக்காளர் பதவி உள்ளடங்கலாக 06 பதவிகளில் நெடுங்காலமாக வெற்றிடங்கள் நிலவின. 2005 ஆம் ஆண்டு தொடக்கம் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிதி) பதவிக்கு நிரந்தரமாக ஒருவர் நியமிக்கப்பட்டாது 60 வயதைக் கடந்த உத்தியோகத்தர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார்.

(ஈ) நோர்வுட் விளையாட்டுத் திடல் செயற்திட்டத்திற்கு 2003 ஆம் ஆண்டில் 21 பதவியணியினருக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தபோதும், அந் நடவடிக்கைகள் அமுலாகாமையால் விளையாட்டுத் திடலில் ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் பணிக்கமர்த்தப்பட்டிருந்தார்.

(உ) 2013 ஆம் ஆண்டின்போது மன்றம் ரூபா 150,000 செலவில் உசாத்துணையாளர் ஒருவரது உதவியுடன் தயாரித்த பதவியணி ஆட்சேர்ப்பு நடைமுறை 2016 ஆம் ஆண்டு இறுதியிலும் அங்கீகரிக்கப்படாமலிருந்தது.

(ஊ) தொண்டமான் கலாசார நிலையத்திற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த கலாசார உத்தியோகத்தர் பதவிக்கு 2005 தொடக்கம் மீளாய்வாண்டு இறுதி வரை உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படாததுடன், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியைச் சேராத 04 பதவிகளுக்கு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின்போது அவர்களுக்கு ரூபா 1,190,732 ல் சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

------------------------------------------------------------

### 5.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த 60 தினங்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2014, 2015 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்கள் மன்றத்தால் 2016 செப்டெம்பர் 14 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2007 ஒக்டோபர் 02 ஆந் திகதிய பீஈடீ/45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் முகாமையாளரின் பொறுப்பு தொடர்பான சான்றிதழ் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

-----------------------------------

2009 யூன் 09 ஆந் திகதிய மற்றும் 2011 டிசெம்பர் 23 ஆந் திகதிய முறையே DMA/2009 (1) மற்றும் DMA/ADM/2011/1/26 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கைகளின் மீது கவனம் செலுத்தப்பட்டு வினைத்திறனுடனான உள்ளக் கட்டுப்பாடு வியூகத்தை ஏற்படுத்துவதற்கு உள்ளகக் கணக்காய்வுப் பதவியணியைப் பயன்படுத்தவேண்டியபோதும், வெற்றிடமாக இருந்த கணக்காளரது பதவிக்குரிய சேவைகளை உள்ளகக் கணக்காய்வாளர் மேற்கொண்டமையால் மீளாய்வாண்டின்போது உள்ளகக் கணக்காய்வு நடைபெறவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------

மீளாய்வாண்டின் பொருட்டு மன்றம் தயாரித்த பாதீட்டுக்குப் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 5.4 பொருட் கொள்வனவுத் திட்டம்

----------------------------------------------

மீளாய்வாண்டின் பொருட்டு மன்றத்தால் பொருட் கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 ஆண்டறிக்கையைப் பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2003 யூலை 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமாயினும், மன்றம் தொடங்கிய 2005 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு முடிவு வரை அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) ஒப்பந்த நிர்வாகம் | குறித்தபடி ஒப்பந்தம் நிறைவேறாமை |
| (ஆ) பதவியணி நிர்வாகம் | பதவியணியினரை நியமித்தலும் ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்திராமையும் |
| (இ) நிதிக் கட்டுப்பாடு | கொடுப்பனவு உறுதிச் சான்றுகளின் மேற்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிகர தொகை முறைப்படி கொடுப்பனவு செய்யப்படுவதையும் அவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்டதையும் குறிக்கும் ‘‘கொடுப்பனவு செய்யப்பட்டது’’ எனும் முத்திரை கொடுப்பனவு உறுதிச் சான்றின் மீதும் அவற்றை உறுதிப்படுத்தும் ஏனைய ஆவணங்களின் மீதும் பொறிக்கப்படாமை. |
| (ஈ) சொத்து முகாமைத்துவம் | சொத்துக்கள் பயன்படுத்தப்படாதிருத்தல் |
| (உ) உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வு நடைபெறாமை |